பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 06 2025 **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த பத்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மக்களின் வாழ்க்கைத்தரத்தை பெரிய அளவில் மேம்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- மழையால் பாதிக்கப்பட்டுள்ள வடகிழக்கு மாநிலங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்துதரும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

- பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு எதிராக வலுவான கண்டனத்தை Eritrea பதிவு செய்திருப்பது பாராட்டுக்குரியது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

- ரஷ்யாவை சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட ராணுவ விமானங்கள் மீது யுக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது.

- தாய்லாந்து ஓபன் குத்துச்சண்டை போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

--இனி விரிவான செய்திகள்--

<<<<<<<>>>>>>

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த பத்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மக்களின் வாழ்க்கைத்தரத்தை பெரிய அளவில் மேம்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று ஆசிய வளர்ச்சி வங்கியின் தலைவர் திரு Masato Kanda, பிரதமரை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இதுதொடர்பாக, திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாட்டை வளர்ச்சிப்பாதைக்கு அழைத்து செல்லும் பயணத்தில் ஆசிய வளர்ச்சி வங்கியுடன் தொடர்ந்து இணைந்து செயலாற்றி வருவதாக தெரிவித்துள்ளார்.

இதில் மேலும் முன்னேற்றம் காணும் விதமாக இன்றைய பேச்சு அமைந்ததாகவும், பல்வேறு விஷயங்கள் குறித்து பரஸ்பரம் கருத்துக்களை பகிர்ந்துகொண்டதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் இந்தியாவில் நகர்ப்புற உட்கட்டமைப்பு வளர்ச்சி, மெட்ரோ விரிவாக்கம் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும் வகையில் 10 பில்லியன் டாலர்களை ஆசிய வளர்ச்சி வங்கி வழங்க இருப்பதாக அதன் தலைவர் திரு Masato Kanda தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், 2047-ல் வளர்ச்சியடைந்த இந்தியா எனும் தொலைநோக்கு பார்வை துணிச்சல் மிக்கது என்றும், ஆசிய வளர்ச்சி வங்கி அந்த லட்சியத்திற்கு துணை நிற்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிய வளர்ச்சி வங்கியுடன் இந்தியா பேணி வரும் உறவு நம்பகத்தன்மை மிக்கது என்றும், அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சியை இந்திய மக்களுக்கு வழங்க தயாராக இருப்பதாகவும் திரு Masato Kanda கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளா, மாஹே மற்றும் கர்நாடகாவில் வரும் நான்காம் தேதிவரை இடி, மின்னல், காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர், லடாக், இமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர் மற்றும் தில்லியில் வரும் நான்காம் தேதிவரை கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மேற்கு ராஜஸ்தானின் ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு புழுதிப்புயல் வீசக்கூடும் என்றும் அந்த மையம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையே, மத்திய அமைச்சர் திரு அமித் ஷா, பருவமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவுகள் குறித்து அஸ்ஸாம், மணிப்பூர், சிக்கிம், அருணாச்சலப்பிரதேச முதலமைச்சர்களை தொடர்புகொண்டு பேசினார்.

அப்போது, அங்குள்ள நிலைமை குறித்து கேட்டறிந்த திரு அமித் ஷா, அம்மாநிலங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்துதரும் என்று உறுதியளித்தார்.

தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப்படைகள், தீயணைப்பு மீட்புப்படையினர், மாநில அரசுகளின் பணியாளர்கள் தொடர்ந்து மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேவையாற்றி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

மேற்குவங்கத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் நோக்கத்துடன் பிஜேபி செயலாற்றி வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் இன்று நடைபெற்ற பேரணி ஒன்றில் பங்கேற்று பேசிய அவர், மேற்குவங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் நிர்வாகம் தோல்வியடைந்திருப்பதாக கூறினார்.

தேர்தலுக்கு பிந்தைய வன்முறை, எல்லைப்பகுதி ஊடுருவல், ஊழல், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பு உள்ளிட்டவை அதனை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக, திரிணாமுல் காங்கிரஸ் தெரிவித்த கருத்துக்கள் தவறானவை என்றும், அது நாட்டின் பெருமிதத்திற்கும், மக்களின் நம்பிக்கைக்கும் எதிராக அமைந்தது என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு எதிராக வலுவான கண்டனத்தை Eritrea பதிவு செய்திருப்பது பாராட்டுக்குரியது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று அவர் Eritrea நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு Osman Saleh –வுடன் பேச்சு நடத்தினார்.

இதுதொடர்பாக, திரு ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சுகாதாரம், கல்வி, வளர்ச்சித்திறன் உட்பட பல்வேறு அம்சங்களில் இருதரப்பு உறவை மேம்படுத்துவது குறித்து இப்பேச்சுவார்த்தை அமைந்ததாக தெரிவித்துள்ளார்.

மேலும், மண்டல வளர்ச்சி செயல்பாடுகள் குறித்து பரஸ்பரம் கருத்துக்களை பகிர்ந்துகொண்டதாக திரு ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

மத்திய அரசின் வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கான பிரச்சார இயக்கம் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, திருவண்ணாமலை மாவட்டத்தில் இன்று நடைபெற்ற பிரச்சார இயக்கத்தில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

இதில், பங்கேற்றதன்மூலம், மத்திய அரசு செயல்படுத்திவரும் பல்வேறு வேளாண் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விரிவான விளக்கத்தை பெற்றதாக விவசாயி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*Sound Byte – பயனாளி – 42 Sec.)*

<<<<<<<>>>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து உலக நாடுகளுக்கு எடுத்துக்கூறும் வகையில், இந்திய அரசு அமைத்துள்ள அனைத்துக்கட்சி குழுக்களின் பயணம் அதன் நோக்கத்தை பூர்த்தி செய்வதாக அமையும் என்று முன்னாள் டென்மார்க் தூதர் திரு 'Freddy Svane ' தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக, இந்தியா மேற்கொண்டுவரும் ராஜதந்திர நடவடிக்கைகளுக்கு அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் உதவி வருவதை வெளிக்காட்டும் வகையில் இந்நடவடிக்கை அமைந்துள்ளதாக முன்னாள் டென்மார்க் தூதர் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

வேளாண்மை என்பது உணவு அளிப்பது மட்டுமல்லாமல், நாட்டின் கலாச்சாரம், பொருளாதாரம், சுற்றுச்சூழலின் அடிப்படையாகவும் திகழ்வதாக மகாராஷ்ட்ரா துணை முதலமைச்சர் திரு அஜித் பவார் தெரிவித்துள்ளார்.

புனேயில் இன்று அவர், நாட்டின் முதலாவது வேளாண் ‘Hackathon –னை தொடங்கிவைத்து பேசினார்.

ஆராய்ச்சியாளர்களை போன்று விவசாயிகள் சிந்திக்க வேண்டும் என்றும், வேளாண்மையில் அறிவியல் அணுகுமுறையை கையாள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நிலையான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பது எண்ணற்ற வாய்ப்புகளை உருவாக்கும் என்றும் திரு அஜித் பவார் குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>

ரஷ்யாவை சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட ராணுவ விமானங்கள் மீது யுக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது.

நீண்டதூர ஏவுகணைகளை பயன்படுத்தும் ரஷ்ய விமானங்கள் மீது, இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக யுக்ரைன் உள்நாட்டு பாதுகாப்பு முகமை தெரிவித்துள்ளது.

ரஷ்யா உடனான போரில் யுக்ரைன் மிகப்பெரிய அளவில் மேற்கொண்ட ட்ரோன் தாக்குதல் இதுவாகும் என்று அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையே, ‘IrKutsk ’ மாகாணத்தில் உள்ள ஒரு ராணுவ முகாம் மீது யுக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தியதாக அதன் ஆளுநர் ‘Igor Kobzev ’ தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

போலந்து நாட்டில் அதிபர் பதவிக்கான தேர்தல் இன்று நடைபெற்று வருகிறது.

நாளை வெளியாகும் தேர்தல் முடிவுகள் அந்நாட்டின் எதிர்காலத்தையும், ஐரோப்பிய யூனியன் உடனான அதன் உறவையும் தீர்மானிப்பதாக அமையும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

கடந்த 125 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு கடந்த மே மாதம் வழக்கத்திற்கு மாறான மழையை கர்நாடகா எதிர்கொண்டதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

மே மாதம் சராசரியாக 74 மில்லி மீட்டர் மழை பெய்துவரும் நிலையில், இந்தாண்டு 219 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளதாக கர்நாடக அரசு கூறியுள்ளது.

இதனால், அம்மாநிலத்தின் 14 முக்கியமான அணைகளில் நீர்வரத்து சீராக உள்ளதாகவும் கர்நாடகா தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தாய்லாந்து ஓபன் குத்துச்சண்டை போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

ஆடவர் 90 கிலோ எடைப்பிரிவில் Naman Tanwar -ரும், 75 கிலோ எடைப்பிரிவில Deepak -க்கும் தங்கப்பதக்கம் வென்றனர்.

------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இறுதிப்போட்டிக்கான இரண்டாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில், மும்பை அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

இப்போட்டியில் வெற்றிபெறும் அணி நாளை மறுநாள் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் பெங்களூரு அணியை எதிர்கொள்ளும்.

<<<<<<<END>>>>>>